# இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்


இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: "தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிற துணையாளர் வருவார். அவரே தந்தையிடமிருந்து வந்து உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார். அவர் வரும்போது என்னைப் பற்றிச் சான்று பகர்வார். நீங்களும் சான்று பகர்வீர்கள். ஏனெனில் நீங்கள் தொடக்கமுதல் என்னோடு இருந்து வருகிறீர்கள்.
('யோவானை 15:26-27)

# இஸ்ரேல், பாலஸ்தின் - அமைதிப் பேச்சுவார்த்தை இன்றியமையாதது -திருத்தந்தை

**வத்திக்கான்:** இஸ்ராயேல், மற்றும் பாலஸ்தீனியத் தலைவர்கள், ஆயுதங்கள் மீதான தங்கள் மோகத்தைக் கைவிட்டு, அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு அனைத்துலக சமுதாயத்தின் உதவியுடன் முன்வரவேண்டும் என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ்.

தொடர் மரணங்களையும், பேரழிவுகளையும் கொணரும் வன்முறைகளைக் கைவிட்டு, அமைதிக்காக்க முன்வரவேண்டும் என, இஸ்ரேல், மற்றும், பாலஸ்தீனிய தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ்.

இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையே அண்மையில் மீண்டும் துவங்கியுள்ள மோதல்களில் பல குழந்தைகள் உயிரிழந்துள்ளது கொடூரமானது, மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது என, தன் 'வானக அரசியே' வாழ்த்தொலி உரைக்குப்பின் எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவர்களின் மரணங்கள், இக்கால மக்கள் வருங்காலத்தைக் கட்டியெழுப்புவதில் அல்ல, மாறாக, அதனை அழிப்பதிலேயே ஆர்வமாக இருப்பதன் அடையாளமாக உள்ளன என்றார்.

தற்போது இஸ்ரேல், மற்றும் காஸாப் பகுதியில் இடம்பெற்றுவரும் வன்முறைகள், தொடர் மரணங்களையும் பேரழிவுகளையும் கொணர்வதுடன், மனித உடன்பிறந்த உணர்வுக்கும், அமைதியான இணக்கவாழ்வுக்கும் ஊறுவிளைவிப்பவைகளாக உள்ளன என்ற கவலையை வெளியிட்டார், திருத்தந்தை பிரான்சிஸ்.

வன்முறைகள் உருவாக்கும் காயங்களைக் குணப்படுத்த, அமைதிப் பேச்சுவார்த்தைக்கு உடனடியாகத் திரும்புவது அத்தியாவசியமானது என்று கூறிய திருத்தந்தை, இஸ்ரேல், மற்றும் பாலஸ்தீனியத் தலைவர்கள், ஆயுதங்கள் மீது கொண்டிருக்கும் ஆர்வத்தைக் கைவிட்டு, அமைதிப் பேச்சுவார்த்தைகளுக்கு, அனைத்துலக சமுதாயத்தின் உதவியுடன் முன்வரவேண்டும் என அழைப்பு விடுத்தார்.



இஸ்ரயேலர்களும், பாலஸ்தீனியர்களும் கலந்துரையாடல், மற்றும் மன்னிப்பின் பாதையைக் கண்டுகொள்ளவும், அமைதி, மற்றும் நீதியைக் கட்டியெழுப்புவதில் பொறுமையுடன் செயல்படுபவர்களாகவும், சகோதரர்களாக ஒன்றிணைந்து வாழ்வதற்குரிய நம்பிக்கையை படிப்படியாக வளர்ப்பவர்களாகவும் செயல்பட, அனைவரும் தொடர்ந்து இறைவேண்டல் செய்யுமாறு அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இஸ்ரேல், பாலஸ்தீன மோதல்களில் உயிரிழந்த குழந்தைகளுக்கு அனைவரும் இறைவேண்டல் செய்யுமாறும் அழைப்பு விடுத்து, தூய பேதுரு பேராலய வளாகத்தில் குழுமியிருந்த மக்களோடு இணைந்து, 'அருள் நிறை மரியே' செபத்தை செபித்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

## "புகழனைத்தும் உமதே!"

கடந்த மே 16 தொடங்கி 25 வரை கடைபிடிக்கப்படும் "இறைவா உமக்கே புகழ்" (Laudato Si) வாரத்தையொட்டி, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம் பொதுவான இல்லமாகிய இப்பூமிக்கோளத்தைப் பராமரிக்க வேண்டியதன் நம் கடமையை வலியுறுத்திக் குறிப்பிட்டுள்ளார்.

"நம் பொதுவான இல்லமாகிய இப்பூமிக்கோளத்தைச் சரியான முறையில் பராமரிப்பதை உறுதிசெய்யும்பொருட்டு, நம் உலகத்தில் நல்லது எது நடைபெற்றாலும், அது, இக்கால, மற்றும், வருங்காலத் தலைமுறைகளுக்காக ஆற்றப்படுவது என்ற ஆழமான உறுதிப்பாட்டில், என்றென்றும் மிக அதிகமான கூட்டுப்பொறுப்புணர்வைக் கொண்டிருப்பவர்களாக, நாம் எல்லாரும் மாறவேண்டும்" என்ற சொற்கள், இறைவா உமக்கே புகழ் வாரம் (LaudatoSi Week) என்ற கருத்துடன் திருத்தந்தையின் இடம்பெற்றிருந்தன.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் Laudato si' திருமடல் வெளியிடப்பட்டதன் ஐந்தாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு Laudato si' வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், 2015ம் ஆண்டு மே 24ம் தேதி கையெழுத்திட்டுள்ள இந்தத் திருமடல், 2015-ம் ஆண்டு ஜூன் 18ம் தேதி வெளியிடப்பட்டது.

நம் பொதுவான இல்லமாகிய இந்த பூமிக்கோளத்தைப் பாதுகாக்கும் அனைத்து நடவடிக்கைகளிலும் அனைவரும் கலந்து கொள்ளுமாறு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைப்பு விடுத்தார். இந்த பூமிக்கோளம், மற்றும், வறியோரின் அழுகுரலை, மக்கள் மேலும் அதிகமாகக் கேட்பதற்கு நல்லதொரு வாய்ப்பாக இந்த வாரம் அமையும் என்றும் திருத்தந்தை கூறினார்.

# ஆசிரியர் தினத்தையொட்டி சிறப்பு சொற்பொழிவு நடைபெற்றது

**கோலாலம்பூர்:** கடந்த மே 14, 2021 கிள்ளான் பள்ளத்தாக்கு கிறிஸ்தவ ஆசிரியர் தினக் கொண்டாட்டத்தில் உரையாற்றும்போது, நேர்மையான மன்னிப்பு, கருணை மற்றும் அன்பான இரக்கம் போன்ற பண்புகளைப் பின்பற்றுவது தொடர்ச்சியான மகிழ்ச்சிக்கு இன்றியமையாதவை என்று மூத்த குடும்ப ஆலோசகரான ஜெரார்ட் கோ கூறினார். ஆனாலும் இந்த மன்னிப்பு வழங்குவதானது, சம்பந்தப்பட்டவர் மன்னிப்புப் பெற்ற பின்பும் தொடர்ந்து உறவில் விரிசல்களை ஏற்படுத்த அனுமதிக்க இயலாது என்றார்.

"மன்னிப்பு என்பது உங்களை பாதித்த அல்லது புண்படுத்திய நிகழ்வை உங்கள் வாழ்க்கையில் மீண்டும் நிகழ அனுமதிப்பதைப் பற்றியது அல்ல, ஆனால் ஏற்பட்ட கோபமும் மனக்கசப்பும் அந்தத் தவறிலிருந்து உங்கள் வாழ்க்கையை ஆட்கொள்ள அனுமதிக்காத முடிவை எடுப்பதாகும்" என்று இயங்கலை வழியாக மலேசியா முழுவதிலும் இருந்து கலந்து கொண்ட ஏறக்குறைய 100-க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் மத்தியல் கருத்துரைத்தார்.




ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒரு முன்னாள் ஆசிரியரான கோ, ஆன்மீக வாழ்க்கையின் முக்கியத்துவத்தையும் மன்னிப்பையும் சிந்திக்க கிறிஸ்தவ ஆசிரியர்கள் மாணவர்களை ஊக்குவிக்க முடியும் என்பதையும் வலியுறுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றும் நல்வாழ்வாழ்வோடு அது கொண்டிருக்கும் தொடர்பைப் பற்றி சிந்திக்க மாணவர்களுக்கு வழிகாட்டுவதன் மூலம், அர்த்தமும் நோக்கமும் நிறைந்த வாழ்க்கையை அனுபவிக்க அவர்களுக்கு நாம் உதவ முடியும் என்று கூறினார்.

பலர் மன்னிக்க போராடுகிறார்கள். ஆதலால், மன்னிப்பின் முக்கியத்துவத்தை நம் மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும். மேலும் மகிழ்ச்சியின் உண்மையான அர்த்தத்தைப் பற்றி அவர்களிடம் பேச வேண்டும் என்றும் அவரது உரையில் கோ பகிர்ந்து கொண்டார். மேலும் கிறிஸ்தவ கண்ணோட்டத்தில், நாம் மன்னிக்கக் கற்றுக் கொள்ளும்போது, இறைவனின் அருள் நம்மில் குடிகொள்ளச் செய்கிறோம் என்று கோ வலியுறுத்தினார்.

இந்நிகழ்ச்சி கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்களின் ஆசிரோடு நடைபெற்றது.

# கோயம்பத்தூர் சாந்தி ஆஸ்ரமத்திற்கு, திருத்தந்தையின் நிதியுதவி

வத்திக்கான்: தமிழகத்திலிருந்து செயல்படும் பெண்கள் நல பராமரிப்பு மையம் ஒன்றிற்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நிதியுதவி வழங்கி, ஊக்கமளித்துள்ளார்.

தமிழகத்தின், கோயம்பத்தூரிலிருந்து இயங்கும் 'சாந்தி ஆஸ்ரமம்' எனும் அனைத்துலக மையத்திற்கு உதவும் நோக்கத்தில், அனைத்துலக புகழ்வாய்ந்த மகப்பேறு மருத்துவர்கள் மற்றும் குழந்தை மருத்துவர்கள் இணைந்து நடத்திய உரோம் நகர் கத்தோலிக்க பல்கலைக் கழகத்தின் மகப்பேறு மருத்துவர், அந்தோனியா தெஸ்தா என்பவர், தொழில்கலை பயிற்சியையும் மருத்துவ உதவிகளையும், கிராமத்திலுள்ள 50 ஆயிரம் குழந்தைகளுக்கு பல்வேறு உதவிகளையும் ஆற்றிவரும் இந்த மையத்திற்கு, இந்த கோவிட் காலத்தில் உதவும்பொருட்டு இணைம் வழி நிதி திரட்டல் ஒன்றை துவக்கினார்.

உணவு வங்கி, மருத்துவ வசதிகள், பயிற்சி




இணையவழி நிதி திரட்டல் கருத்தரங்கின் இறுதியில், திருத்தந்தையின் தர்மப்பணிகளுக்குப் பொறுப்பாக பணியாற்றும், கர்தினால் Konrad Krajewski. அவர்கள், திருத்தந்தையின் பெயரால், இந்த நிதியுதவியை அறிவித்துள்ளார்

இரண்டு ஆண்டுகளுக்கு முன், இந்தியாவிற்கு பயணம் மேற்கொண்டபோது, கோயம்பத்தூரில் சாந்தி ஆஸ்ரமம் மற்றும் சேவைகளை நேரடியாகக் கண்டுவந்த மையங்கள் வழியாக பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் உதவி வரும் சாந்தி ஆஸ்ரமத்திற்கான நிதி திரட்டலில், இந்த கோவிட் காலத்தில், திருத்தந்தையும் தன் பங்களிப்பை தருவதாக, திருத்தந்தையின் பிறரன்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருக்கும் கர்தினால் கராஜேவெஸ்கி அவர்கள் தெரிவித்தார்.

*கிறிஸ்டோபர் பிரான்சிஸ் - வத்திக்கான் செய்திகள்*

# இந்தியாவிற்கு மலேசியத் திருஅவை நிதி உதவி

வத்திக்கான்: இந்தியாவில் கோவிட்-19 பெருந் தொற்றால் இலட்சக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டும், ஆயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தும் வருகின்ற இவ்வேளையில், அந்நாட்டு மக்களுக்காக இறைவேண்டல் செய்யுமாறும், நிதியுதவிகளை வழங்குமாறும் அழைப்பு விடுத்துள்ளார், மலேசியாவின் கூச்சிங் மாமறைமறைமாவட்ட பேராயர் சைமன் போ.



மலேசிய தூதர்Westmoreland Anak Edward Palon,திருத்தந்தையை சந்திக்கிறார்

கடந்த மே 16, ஞாயிறன்று, புனித யோசேப்பு பேராலயத்தில், இணையம் வழி திருப்பலி நிறைவேற்றிய பேராயர் அவர்கள், மலேசியாவின் சரவாக் மாநிலம், மற்றும், அந்நாட்டின் ஏனைய பகுதிகளின் கத்தோலிக்கர்கள், பெருந் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள இந்தி- யாவுக்கு நிதியுதவி செய்யுமாறு விண்ணப்பித் துள்ளார்.

இந்த நிதி சேகரிப்பு,மே 22, சனிக்கிழமை வரை தொடர்ந்தது என்று, கூச்சிங் மாமறைமறைமாவட்டத்தின் இணைம் பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ள, பேராயர் சைமன் போ. அவர்கள், இந்தியாவில் நிலவும் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு நம்மிடம் வளங்கள் இல்லையென்றாலும், நமது ஏழ்மையிலும், அன்பு, மற்றும் நம்பிக்கையை வழங்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, இந்தியாவில் கோவிட்-19 பெருந்தொற்றால், கடந்த ஐந்து வாரங்களில், ஒரு நாளைக்கு 4 பேர் என, குறைந்தது 160, மறைமாவட்ட, மற்றும், துறவு சபைகளின் அருள்பணியாளர்கள் உயிரிழந்துள்ளனர் என்று, ‘இந்தியன் கரன்’ இதழின் ஆசிரியரான கப்புச்சின் அருள்பணி சுரேஷ் மத்தேயு அவர்கள் கூறியுள்ளார்.

*மேரி தெரேசா: வத்திக்கான் செய்திகள்*

## "இக்னேசியஸ் 500" சிறப்பு ஆண்டு,

1521-ஆம் ஆண்டு, பாம்பலோனா கோட்டையைக் காக்க, இளம் வீரர் இக்னேசியஸ், போரில் ஈடுபட்டிருந்த வேளையில், மே 20-ஆம் தேதி, அவரது காலை பீரங்கி குண்டு தாக்கியது. அந்நிகழ்வு, புனித இக்னேசியஸ் வாழ்வில் ஒரு மாற்றத்தைக் கொணர்ந்ததால், அந்நிகழ்வின் 500-ஆம் ஆண்டு தற்போது சிறப்பிக்கப்படுகிறது.



## இளையோர் உலக நாள் கொண்டாட்டத்தின் நாள் மாற்றம்

குருத்தோலை ஞாயிறன்று, பாரம்பரியமாகச் சிறப்பிக்கப்பட்டு வந்த இளையோர் உலக நாள் கொண்டாட்டங்கள், 2021-ஆம் ஆண்டிலிருந்து, கிறிஸ்து அரசர் பெருவிழாவன்று சிறப்பிக்கப்படவேண்டும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அறிவித்திருப்பதன் பேரில், வருகிற நவம்பர் 22-ஆம் தேதி, கிறிஸ்து அரசர் பெருவிழாவன்று, உலக அளவில் தலத்திருஅவைகளில் இந்த உலக நாள் சிறப்பிக்கப்படவுள்ளது.

# தூய ஆவியாரின் புத்துணர்வோடு புதுவாழ்வு வாழ்வோம்

இன்று நாம் தூய ஆவியாரின் பெருவிழாவை, அதாவது பெந்தகொஸ்தே விழாவைக் கொண்டாடுகின்றோம். இந்த நாளில்தான் தூய ஆவியானவர் சீடர்கள் மீது இறங்கி வருகின்றார், மகிழ்ச்சி பொங்கும் தூய ஆவியானவரின் விழாவைக் கொண்டாடும் இந்த நல்ல நாளில், இவ்விழா நமக்கு உணர்த்தும் செய்தி என்ன என்று சிந்தித்துப் பார்ப்போம்..

இன்றைய முதல் வாசகத்தில் இடம்பெறும் திருத்தூதர் பணிகள் நூலில், நாம் வாசிக்கும் இறைவசனங்கள்: "அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப் பட்டனர். தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினார்கள் என கூறிகின்றன. தூய ஆவியாரால் மனித குலம் ஆட்கொள்ளப்பட்டாலும், அங்கு உருவாகிய அழகிய வாழ்வை புனித பவுல் கலாத்தியருக்கு எழுதிய திருமுகத்தில் விவரிக்கிறார். தூய ஆவியாரின் இன்றைய பெருவிழா வெறும் ஒருநாள் கொண்டாட்டமாக இராமல், நம் வாழ்வில் ஆழந்த மாற்றங்களை ஏற்படுத்தும் ஓர் ஆழ்ந்த அனுபவமாக அமைய தூய ஆவியாரின் கொடைகளையும் கனியையும் நாம் வாழ்வில் அனுபவிக்க வேண்டும்.

இதன் அவசியத்தை வெளிப்படுத்தும் புனித பவுல் அறிவுறையின்படி, தூய ஆவியின் தூண்டுதலுக்கு ஏற்ப வாழ்வோம். அப்போது ஊனியல்பின் இச்சைகளுக்கு அடிமையாகமாட்டோம். ஏனெனில் ஊனியல்பின் இச்சை தூய ஆவிக்கு முரணானது. இக்காலத்தில் மனிதனின் இச்சைக்குரிய செயல்பாட்டினால் வன்முறைகளும் இழிவான செயல்களும் பெருகிவருகின்றன. இதனால் மனித மாண்பு பாழாகிறது. தூய ஆவியில் ஒன்றித்து வாழ்வோர் இத்தகைய தீய நாட்டங்களிலிலருந்து மீட்கப்படுவர் என்பது உறுதி. விவிலியத்தில் தூய ஆவியானவரைப் பற்றி எங்கெல்லாம் சொல்லப்படுகின்றதோ அங்கெல்லாம் வாழ்வும், ஆற்றலும் இணைந்தே வருகின்றது என்பதை நாம் மறுக்கமுடியாது.

இன்றைய நற்செய்தியில், "தந்தையிடமிருந்து நான் உங்களுக்கு அனுப்பப் போகிற துணையாளர் வருவார். அவரே தந்தையிடமிருந்து வந்து உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார். அவர் வரும்போது என்னைப் பற்றிச் சான்று பகர்வார். நீங்களும் சான்று பகர்வீர்கள்." என்கிறார் இயேசு. அதன்படி, தூய ஆவியாரின் வருகைக்குப் பிறகு துணிச்சலோடு ஆண்டவர் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை மக்களுக்கு திருத்தூதர்கள் எடுத்துரைகின்றார்கள். ஆகையால், தூய ஆவியாரின் வருகை திருஅவையில் ஒரு மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டு வந்தது என்பது தெளிவாகிறது.

இன்று தூய ஆவியாரின் பெருவிழாவைக் கொண்டாடும் நாம், இரவெல்லாம் கண் விழித்து தூய ஆவியாரே வந்தருளும், இறங்கி வாரும் என்று முழக்கமிட்டு, அடுத்து வரும் நாள்களில் அவரது படிப்பினையிலும் வழிகாட்டுதலிலும் நாட்டமில்லாமல் வாழ்வது சாட்சிய வாழ்வுக்கு ஏற்புடையதாகாது.

உறுதிபூசிதல் அருளடையாளத்தில் சிறப்பாக நம்மில் இறங்கி நம்மை இயக்கிக் கொண்டிருப்பவர் இதே ஆவியாரே. அவர் நம்மில் ஒருபோதும் உறங்குவதுமில்லை. அவரை வருந்தி அழைக்க வேண்டிய அவசியமில்லை. அவரது கனியாகிய அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு, நன்னயம், நம்பிக்கை, கனிவு, தன்னடக்கம் ஆகியவை நமக்கும் அருளப்பட்டிருக்கிறது. இது மறுக்கப்பட முடியாத உண்மை. எனவே அந்த ஆவியார் காட்டும் நெறியிலேயே நடக்க முயலுவோம். இதற்காகதான் இயேசு துணையாளரான தூய ஆவியாரை அனுப்பினார்.
நாம் கொண்டாடும் தூய ஆவியாரின் பெருவிழாவில், ஆண்டவரே, உம் ஆவியை அனுப்பி, மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர்' (திபா 104:30) என்பதற்கிணங்க அவர் நமது வாழ்வைப் புதுப்பிக்கிறார். உறுப்புக்கள் பலவாயினும், ஓரே உடலாக இருப்பதுபோல, திருஅவையில் வாழும் நாமும் பலராக இருந்தாலும், தூய ஆவியின் இயல்பைப் பெற்றுள்ள நாம், பிரிவினைகள் இல்லாத சமூகத்தை சேர்ந்தவர்களாக வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். தூய ஆவியின் ஏழு கொடைகளைப்; பெற்ற நாம், புத்துணர்வு கொண்டு, புதுவாழ்வு வாழ்வோம். பிளவுகள் அகற்றி, ஒற்றுமை காப்போம். இது இயேசுவின் கனவுமாகும் (யோவா 17:21)

*-லூர்தம்மாள், காஜாங்,*

**தூய ஆவியார் பெருவிழா**
திப: 12: 1-11
திபா: 04: 1ab,24ac. 29bc-30. 31,34
கலா 5: 16-25
யோவான்: 15: 26-27; 16: 12-15
**ஞாயிறு வாசகம்: ஆண்டு 2**

**வாரநாள் முதல் வாசகம்: I**
**திருப்புகழ் மாலை :**
**பெருவிழாவுக்குரியது**